தினகரன் • செவ்வாய்க்கிழமை • 20.10.2015

கர்நாடகா

நாடு முழுவதும்

# 300 காடுகள் பாதுகாக்கப்பட்ட பகுதி

## மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் தகவல்

பெங்களூரு, அக். 20: கர்நாடகாவில் 30 வனப்பகுதிகள் உள்பட நாடு முழுவதும் 300 வனப்பகுதிகள் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக தேர்வு செய்துள்ளோம். இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு அடுத்தாண்டு வெளியிடப்படும் என்று மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் தெரிவித்தார்.

கர்நாடகாவில் இரண்டு நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்ட அமைச்சர், நேற்று முன்தினம் சாம்ராஜ்நகர் மாவட்டத்தில் நடந்த விழாவில் வன விலங்குகள் தாக்கி பலியான குடும்பத்தினருக்கு நிவாரண நிதி வழங்குவது உள்பட பல்வேறு நல திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கினார். அதை தொடர்ந்து நேற்று பெங்களூரு வந்த அவர், கர்நாடகாவில் வனப்பகுதி மேம்பாடு குறித்து மாநில அமைச்சர் ரமாநாத்ரெய் உள்பட அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். அதை தொடர்ந்து மல்லேஸ்வரத்தில் உள்ள இண்டியன் உட்சயின்ஸ் டெக்னாலஜி சென்டரில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

நாட்டில் மொத்த நிலப்பரப்பில 15 சதவீதம் வனப்பகுதியாக இருக்க வேண்டும் என்பது மத்திய அரசின் நோக்கமாகும். அதேபோல் மாநிலங்களில் உள்ள மொத்த நிலப்பரப்பிலும் 15 சதவீதம் வனபகுதிக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். நாட்டின் வட-கிழக்கு மாநிலங்களில் இந்த இலக்கு முழுமையாக எட்டி இருந்தாலும், பிற மாநிலங்களில் முழுமை பெறவில்லை. அதை கருத்தில் கொண்டு வனப்பகுதி மேம்பாட்டிற்கு முன்னுரிமை கொடுக்கும்படி அனைத்து மாநில அரசுகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எந்தெந்த வகையில் வனப்பகுதி மேம்படுத்த வேண்டும் என்ற வழி காட்டுதலும் கொடுக்கப்பட்டுள்ளது. மாநில அரசுகள் அதை பின்பற்றினால், முழுமையாக இலக்கை எட்ட முடியும். வனப்பகுதி மேம்படுத்துவதால் மழைவளம் மேம்படும் மற்றும் சுற்றுச்சூழல் முழுமையாக காப்பாற்றப்படும். வன மேம்பாட்டில் போதிய கவனம் செலுத்த தவறினால், எதிர்கால சந்ததியினர் மிகவும் கஷ்டப்படுவார்கள். அதற்கு வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்ககூடாது.

நாட்டில் உள்ள முக்கியமான 500க்கும் மேற்பட்ட வனப்பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று ஆய்வு குழு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்தது.

இது தொடர்பாக நிபுணர்களுடன் நடத்திய ஆலோசனையில் முதல் கட்டமாக 300 காடுகளை பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக அறிவிக்க முடிவு செய்யப்பட்டது. அதற்கான கோப்பில் நான் கையெழுத்து போட்டுள்ளேன். அதில் கர்நாடகாவில் உள்ள 30 வனப்பகுதிகள் அடங்கியுள்ளது. அதற்காக அதிகாரபூர்வ அறிவிப்பு வரும் 2016 மார்ச் 26ம் தேதிக்குள் அறிவிக்கப்படும். மீதியுள்ள 200 வனப்பகுதிகள் குறித்து விரைவில் நிபுணர்களுடன் ஆலோசித்து முடிவு செய்யப்படும்.

மேலும் சாம்ராஜ்நகர் மாவட்டத்தில் உள்ள பலிகிரி ரங்கனபெட்டா் வனத்தை பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று மாநில வனத்துறை அமைச்சகம் பரிந்துரை செய்துள்ளது. அது மாநில அரசின் சார்பில் இன்னும் மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கவில்லை. மாநில அரசு கோப்புகள் அனுப்பினால் பரிசீலனை செய்து பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக அறிவிக்கப்படும்.

பொதுவாக 10 கி.மீ சுற்றளவு கொண்ட அரிய வகை வன விலங்குகள் மற்றும் மூலிகைகள் கொண்ட காடுகளை பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக அறிவித்து பராமரிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் உத்தரவிட்டுள்ளது. ஆனால் சில மாநில அரசுகள் 1 கி.மீ தொடங்கி 10 கி,மீ சுற்றளவு கொண்ட காடுகளை பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக அறிவிக்கும்படி வலியுறுத்தி வருகிறது.

இது தொடர்பாக விரிவாக ஆலோசனை நடத்தப்படும். மேலும் கர்நாடகாவில் உள்ள பிலிகிரி ரங்கனபெட்டா, மலை மாதேஸ்வர மலை, காவிரி ஆகிய வன விலங்கு சரணாலயங்களை புலிகள் பாதுகாப்பு பகுதியாக அறிவிக்ககோரி கர்நாடக அரசின் சார்பில் மத்திய அரசுக்கு சிபாரிசு வந்தால், உடனடியாக பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் பிலிகிரி ரங்கனபெட்ட வனப்பகுதியில காபி பயிர் செய்யும் விவசாயிகளை வெளியேற்ற முடியாது. அவர்கள் வன விலங்கு பாதுகாப்பு சட்டம் கொண்டுவருவதற்கு முன்பே காபி பயிர் செய்ய அனுமதி பெற்றுள்ளனர்.

இவ்வாறு அமைச்சர் கூறினார்.